செய்தி வெளியீடு எண்:16 நாள்:08.07.2019

***தேனி மாவட்டம்***
***தொழில்நெறி விழிப்புணர்வு (Career Awareness) மற்றும்***
***திறன் விழிப்புணர்வு (Skill Awareness) வார விழிப்புணர்வு பேரணியை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***கொடியசைத்து துவக்கி வைத்தார்.***

******

தேனி-அல்லிநகரம் அரசு உயர்நிலைப்பள்ளிலிருந்து, தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் வரை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் 200-க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட தொழில்நெறி விழிப்புணர்வு (Career Awareness) மற்றும் திறன் விழிப்புணர்வு (Skill Awareness) வார விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.07.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழக அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள், அரசுத்தேர்விற்கான பயிற்சி வகுப்புகள், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான வழிகாட்டி கையேடுகள், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை போன்ற பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில், தொழில் நெறி வழிகாட்டும் விழிப்புணர்வு வாரம் 08.07.2019 இன்று முதல் 12.07.2019 வரை தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது. அதன்படி, தொழில் நெறி வழிகாட்டும் புத்தக கண்காட்சி, பள்ளி மாணவ, மாணவியர்களைக் கொண்டு விழிப்புணர்வு பேரணி, கருத்தரங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் மாணவ, மாணவியர்கள், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC), பணியாளர் தேர்வாணையம் (SSC), வங்கிப்பணியாளர்கள் தேர்வாணையம் (IBPS), ஆசிரியர்கள் தேர்வாணையம் (TRB) மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் (TNUSRB) தேர்வாணையத்தால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் எளிதில் வெற்றி பெறுவது குறித்து தொழில்நெறி விழிப்புணர்வு (Career Awareness) மற்றும் திறன் விழிப்புணர்வு (Skill Awareness) விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், வேலைவாய்ப்புகள், போட்டித்தேர்வுகள், அதற்கான இலவச பயிற்சி வகுப்புகள் மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சி ஆகியவை தொடர்பான ஆலோசனைகளை மாணவ, மாணவியர்கள், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனை மாணவ, மாணவியர்கள், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கலைச்செல்வன், தேனி அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் வேல்முருகன், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**